# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2170/2 - 2020 අප්‍රේල් මස 08 වැනි බදාදා - 2020.04.08

*2170/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

**அறிவித்தல்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரை மற்றும் 46 (1) (அ) ஆம் உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2019, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, உடனடியாக நடைமுறைக்குவருமாறு மேலும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2020, ஏப்பிறல் 08.*


1A - G 32213 — 32 (2020/04)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் இல. (1) ''பாதுகாப்பு அமைச்சர்'' என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் 36 மற்றும் 37 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் நிரல் I இல் 35 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் நிரல் II இல் 32 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஈ) அதன் நிரல் III இல் பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்;

- (1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்
- (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) குடியுரிமைச் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இந்திய வம்சாவளி ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்
- (1986 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) உள்நாட்டவரல்லாதோருக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) உள்நாட்டவரல்லாதோருக்கு பிரஜாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்

2. அவ்வறிவித்தலில் இல. (15) ''மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர்'' என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் 38 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

39. குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகள்
40. இலங்கை குடியுரிமைக்குரிய நடவடிக்கைகள்

(ஆ) அதன் நிரல் I இல் 39 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் நிரல் II இல் 26 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;

27. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

(ஈ) அதன் நிரல் III இல் '(1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கிராமோதய சபைச் சட்டம்' எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை சேர்ப்பதன் மூலம்;

- (1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்
- (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) குடியுரிமைச் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இந்திய வம்சாவளி ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்
- (1986 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) உள்நாட்டவரல்லாதோருக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க)உள்நாட்டவரல்லாதோருக்கு பிரஜாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.